1982 பிப்ரவரி 2]

காலை 10-20 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(உ) வினாக்கள் விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மின்கட்டண ஆய்வுக்குழு.

*வினா எண் 1—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மின் கட்டணத்தை திருத்தி அமைக்க மின் கட்டண ஆய்வுக்குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் குழு அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதா?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : (அ) அண்ட் (ஆ) ஆம்.

(இ) மின் கட்டண ஆய்வுக்குழு அரசுக்கு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மின்கட்டண சீரமைப்பு குறித்து இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தது. இவற்றை ஏற்று 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குழுவின் இறுதி அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்திக்காகும் அடக்க விலையை விட அதனுடைய விநியோக விலை எந்தக் காரணத்தைக் கொண்டும் குறையக் கூடாது என்று மத்திய குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில்தான் இந்த மின் கட்டண ஆய்வுக் குழு அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. பொதுவாக மின்சார உற்பத்தியின் அதிகச் செலவுக்குக் காரணம், நிலக்கரி விலை, பெட்ரோலியம் போன்ற மூலப் பொருள்களின் விலை, மற்றும் சரக்குக் கட்டணத்தினுடைய விலை உயர்வுதான் என்று தெரிகிறது. எனவே, இதுபோன்ற மூலப் பொருள்களை, மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கும்போது, குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்துமா? அதற்காக இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முக்கியமாக மின் வாரியத்திற்குச் செலவு கூடுதலாவது, அவ்வப்போது, மத்திய அரசு, நிலக்கரி விலையை உயர்த்துவது, ரெயில்வே கட்டணத்தை உயர்த்துவது, அதே போல் பாய்லர்களுக்குத் தேவையான ஃபர்னேஸ் ஆயில்' இவைகளின் விலையை உயர்த்துவது என்கிற நடவடிக்கைகளின் காரணமாகவும் பெரும் செலவுகளுக்கு ஆளாகி இருக்கிறோம். அண்மையில் நடந்த மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அரசு நடத்துகின்ற பொது நிறுவனங்களில் இத்தகைய நிலக்கரி விலையை உயர்த்துகிறபொழுதோ அல்லது ஆயில் போன்றவைகளின் விலையை உயர்த்துகின்றபொழுதோ, கூடுமான வரையில் மாநிலங்களையும் கலந்து ஆலோசித்தபிறகு அவர்கள் முடிவெடுத்தால் நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், மத்திய அரசைப் பொறுத்த வரையில், மாநில மின்சார வாரியங்களிடமிருந்து சுலபமாகப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், மாநிலங்களைப் பொறுத்தவரையில் பல இலட்சக்கணக்கான மக்களிடமிருந்து அந்த நிதியைப் பெற வேண்டியிருக்கிறது. எந்த அளவு பயனீட்டாளர்கள் தாங்குவார்கள் என்பதை மாநிலங்கள்தான் உணர்கின்றன. எனவே, மாநிலங்களைக் கலந்து கொண்டு, அந்தக் காரியங்களைச் செய்வது நன்றாக இருக்கும் என்று மத்திய அரசுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தி, விநியோகம் ஆகிய இரண்டையும் ஒரு மத்திய அமைப்பின்கீழ் கொண்டு வர மத்திய அரசு முடிவெடுத்திருப்பதாகக் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு உயர் அதிகாரி பத்திரிகைகளிலே பேட்டி கொடுத்திருக்கிறார்கள். எனவே, அப்படி மத்திய அமைப்பின் கீழ் கொண்டு வரும்போது, நம்முடைய அரசு நேரடியாக சில சாதனைகளைச் செய்வது தடைப்படும் என்ற கருத்தில் இதுகுறித்து ஏதேனும் ஆட்சேபனையை நமது அரசு தெரிவித்திருக்கிறதா? அதில் நம்முடைய அரசின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நானும் அந்தத் தகவலைப் பத்திரிகையிலேதான் பார்த்தேன். அதைப் போல் எந்தத் தகவலும் நம்முடைய அரசுக்கு வரவில்லை. மத்திய அரசு மாநில அரசுகளின் விவகாரங்களில் தலையிடுவதைவிட அவர்களுடைய வேலைகளில் கவனம் செலுத்துவது நல்லது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் கட்டணம் திருத்தி அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவில் அங்கம் பெற்றவர்கள் யார், யார் என்பதை

1982 பிப்ரவரி 2]

அறிவிக்க இயலுமா? மற்றும், அதனுடைய ஆய்வுரைகள் என்ன என்பதைத் தற்சமயம் அமைச்சர் அவர்கள் சபைக்கு அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கின்றவர்கள் மின் வாரியத் தலைவர், பொதுப் பணித் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், தொழில் துறைச் செயலாளர், கணக்கு உறுப்பினர், மின் வாரியம், தொழில் நுட்ப உறுப்பினர், மின் வாரியம், பேராசிரியர் டி.ஆர். இராசகோபாலன், திருச்சி, நிதிக் கட்டுப்பாட்டாளர் (வரவு) மின் வாரியம் ஆகியோராவர்.

ஏற்கனவே, இடைக்கால அறிக்கை கொடுத்து, அதிலே ஒவ்வொரு பயனீட்டாளருக்கும் ஒரே சீரான கட்டணத்தை, அதாவது மீட்டர் வாடகை போன்றவற்றை மாற்றி, ஒரே கட்டணமாக வசூலிக்கலாம் என்று பரிந்துரை கொடுத்தார்கள். அதை ஏற்றுக் கொண்டோம். இன்னும் மேற்கொண்டு கூடுதலாக இருக்கக்கூடிய செலவுகளைக் கருத்தில் கொண்டு, எந்த எந்த வகையில் மின் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் குறைவாக வசூலிப்பதால் அரசுக்கு 1981—82-ல் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு? தமிழ்நாட்டில் வசூலிப்பது மற்ற எந்தெந்த மாநிலங்களில் வசூலிப்பதை விட குறைவாக உள்ளது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1980—81-ல் குறைவாக மின்கட்டணம் வசூலித்ததினால் ஏற்பட்ட வருவாய் இழப்பு 106 கோடி ரூபாய். 1981—82-ல், 117·81 கோடி ரூபாய்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறது. குறிப்பாக மற்ற மாநிலங்களைப் பற்றிக் கேட்டார்கள். அது மிகப் பெரிய புள்ளிவிவரமாக இருக்கின்றது. அதனால்தான் ஆளுநர் உரையில், மற்ற மாநிலங்களை பற்றி எண்ணிப் பார்க்கிற போது, தமிழகத்திலே உள்ள மின் வருவாய் கட்டண விகிதம் குறைவாக உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு பெ.சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் கட்டணத்தைத் திருத்தி அமைப்பதற்காக, இந்த அய்வுக்குழு போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வுக் குழுவினர் மின்வாரியத்திற்கு வரக்கூடிய நஷ்டங்களை மட்டும் ஆராய்ந்தார்களா? அல்லது

மின்சாரம் உபயோகிப்பவர்களுடைய கஷ்டங்களையும் ஆராய்ந்து கட்டணத்தை உயர்த்த இருக்கிறார்களா? அதைப்பற்றி யோசிக்க அரசாங்கம் அவர்களுக்கு அறிவுரை வழங்கி இருக்கிறதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கஷ்டங்கள் நஷ்டஙகள் இரண்டையும் ஆராய்ந்தார்கள்.

திரு எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அமைப்பில், அந்தக் குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் அதிகாரிகளைத் தவிர, ஒரு பேராசிரியர் இருக்கிறார் என்று தெரிகிறது. இந்தக் குழுவிலே அனைத்துக் கட்சியைத் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற அரசு ஆவன செய்யுமா? அதோடு மட்டுமல்ல இந்த மின்கட்டண உயர்வு என்பது, அந்த மின்வாரியத்திற்கு அதிகமான ஊழியர்களை நியமிப்பதன் காரணமாகவும் மற்றும் கட்டட வேலைகளுக்கு செலவழிக்கப்படுதும்தான் மின் கட்டணம் உயர்வதற்கு காரணம் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதிகாரிகள் மட்டும்தான் அந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து மின் கட்டண உயர்வுக்குப் பரிந்துரை செய்தால் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கக்கூடாது என்பதல்ல. மின்வாரிய ஆலோசனைக் குழு இருக்கிறது. அதிலே அனைத்துக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அதிலும் இதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மின்வாரியத்திற்கு இழப்பு எப்படி ஏற்படுகின்றது என்ற விவரங்களைப் பற்றி இந்தக் கூட்டத்தொடரில் மின்சார வாரியத்தின் வரவு செலவுத் திட்டம் விவாதத்திற்கு வரும் என்று கருதுகிறேன். அப்போது விரிவாகப் பேசிக்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்: Is it not a fact that the staff in Electricity Board is very much more than what is required? If so may I know what Government proposes to do now?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர், களே, தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறோம்.